177

177

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JAN 1942
MADRAS

Editor & Publisher:
Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,
... Training School, Trichinopoly.

JC
கையா,N.11Ш
N42.32:7
182304

கா... வரி **1942** மலர் **7**

... டசாலை, திருச்சினாப்பள்ளி.

நுஷ ... தனிப்பிரதி அணா 1¼.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 185
2. புத்தாண்டு வாழ்த்து 186
3. சென்னை கல்வி இலாகா 187
4. கிறீஸ்துவின் பிறப்பு 188
5. புதிய ஏற்பாட்டில் உடற்பயிற்சிக் கல்வி 189
6. இருசொல் அலங்காரம் 191
7. ஜீவியத்தின் நிலையை விஞ்ஞான போதனை ... அறிவித்தல் 192
8. பகல் (Day) எப்படி உண்டாயிற்று? 194
9. பாடக்குறிப்பு 196
10. கிராமக் கல்விப் பிரசாரம் 3 ... ... 19[illegible]
11. ஞயம்பட உரை ... ... 20[illegible]
12. ஜலதோஷம் 202
13. நமது சரடு 204
14. ஓர் ருசிகர சம்பாஷணை 207
15. விடுகதை 208
16. நம் பாடசாலை நிகழ்ச்சிகள் 209
17. பெற்றோர் சங்கம் 210
18. இளஞ் சாரணச் சிறுவரியக்கம் திறப்புவிழா ... 211
19. சிறுவர் பகுதி 212
20. விடுகதை விடைகள் 213
21. கோலாட்டம் 214

Imprimatur: ✠ JAMES,

Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher :
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை

OFFICE OF THE REG
2 JAN 1942
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 32] 15 ஜனவரி 1942 [மலர் 7

பத்திராதிபர் குறிப்புகள்

We wish all our Subscribers and well-wishers a Most Happy and Prosperous New Year.

நமது பூங்கொத்து சந்தாதாரர்களுக்கும் அபிமானிகளுக்கும் ஏனைய நேயர்கட்கும் எமது மனமார்ந்த **புது வருஷ** வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நமது "பூங்கொத்தை"ப் பரிவுடன் ஆதரித்துப் படித்துப் பயன் எய்திவருபவர்கட்கு எமது சந்தோஷமும், நன்றியும் என்றும் உரிமையாகும். காகிதப் பஞ்சத்தினால் பிரசுரங்கள் எல்லாம் எங்கும் நலிந்தும், சிதைந்தும் இருக்கும் இக்காலத்தில்கூட நமது "பூங்கொத்து" விஷயத்திலும், பக்கங்களிலும், வரிகளின் எண்ணிக்கையிலும் ஒரு சிறிதும் குன்றாமல் முன்போலவே விளங்குகின்றது! ஆனால் வெளித் தோற்றத்தில் (Size) சற்று குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஓரங்கள் (Margin) மாத்திரமே கொஞ்சம் க்த்தரிக்கப்பட்டுள்ளன.

எனவே, நம் நேயர்கள் இதனையுணர்ந்து, "பூங்கொத்தை" மகிமைப்படுத்தி, அதன் பயனைப் பெற்றுவருவார்களாக! அதோடு, அதிகமதிகமாய் விஷயதானங்கள் புரிந்தும் வருவதோடு அவரவர்கள் செலுத்தவேண்டிய சந்தாக்களை ஒழுங்காய்ச் செலுத்திவருவார்களாக. எமது மனமுவந்த நன்றி அனைவர்க்கும் உரித்தாகுக.

புத்தாண்டு வாழ்த்துப்பா

கடல்சூழ் புவிக்கணி கலமென லாகித்
திடமுறு புகழ்மலி சிறியவு ரோமையாம்
விரிபல வளநிறை திரிசிர புரநகர்
புரிபெருந் தவமெனப் பொலிவுற விளங்கும்
திருக்குடும் பப்பெயர்ச் சேசம் பெற்ற
விருப்புறு மாசான் வியன்பயிற் சிக்கனி
பழுத்தினி துதவும் பண்புறு தருவிற்
றளிர்த்தின் மணந்தரு தண்பூந் துணரே
சென்றன வாண்டெலாந் தெளிவுற வெமக்கே
ஒன்றல வளப்பிலா வொண்மணநல்கினை
அவையிவை யிவையென வரைதலு மரிதே
நவையறு மகிழ்தரு நாற்பா னிரண்டிலும்
உன்மண மெங்கட் குறுவிருந் தாக
நன்மன மேகொடு நல்குதி யதாஅன்று
உள்ளங் களிக்க வுன்றனை வளர்க்கும்
வள்ளலா ராகு மாதவக் குருமுனி
சங்கைக் குரிய சாமி ஏ. (A) லூர்தேனும்
துங்கத் தலைவருந் துணைவனு நீயும்
நின்மணம் பெருக நினக்கருள் பவரும்
தன்னிக ரில்லாத் தற்பர னருளால்
வாழிபல் லாண்டு வாழிபல் லாண்டு
தாழிருங் காவிரித் தண்மண லினும்பல
வாழிபல் லாண்டு வாழிபல் லாண்டே.

இங்ஙனம்,

ணம்பெற்று மகிழ்ந்தோன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182304
600 008

சென்னை கல்வி இலாகா

Amendment to the Rules relating to the Provident Fund for teachers in non-pensionable service: G. O. M. S. No. 1922, Ed.

ஷை உத்தரவின்படி: ஷை ப்ராவிடெண்ட் பண்டில் சேர்ந்துள்ளவர்கள், இறந்துபோனாலும், அல்லது 60 வயது நிரம்பப் பெற்றிருந்தாலும், அல்லது கல்வி டைரெக்டர் "திருப்தியடையக் கூடிய மற்றெந்த சரியான காரணம்" காட்டப்பட்டாலும், தங்களுக்குச் சேரவேண்டிய ஷை ப்ராவிடெண்டு பண்டு தொகைகளையெல்லாம் ஸர்க்காரிடமிருந்து பெற்றுக்கொள்ள அனுமதியுண்டு.

கல்வி டைரேக்டரது சுற்றுத்தரவு

Proceedings R. O. C. N. 4201-B/40, dated 3rd Dec. 1941 of the Director of Public Instruction, Madras.

ஆரம்பப் பாடசாலைகளில் "வீட்டு வேலை முறை" போதனை. (Teaching of Home Science):—பெண்பாடசாலைகளில் VI முதல் VIII வகுப்பு முடிய ஷை பாடம் கட்டாயப்பாடங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால் பெண்பாடசாலைகளில் வேலை செய்யும் நேரம் போதாது என்ற ஒரு காரணத்தாலும், மேலும் இந்த "வீட்டு வேலை முறை"ப்பாடத்தைக் "கை வேலை முன்னணி" பாடத்திற்குப் (Prevocational Subject) பதிலாக வைத்துக்கொள்ளலாமென்ற ஓர் ஆலோசனையை முன்னிட்டும், கல்வி டைரெக்டர், ஷை வீட்டு வேலை முறைப்பாடம் (Home Science) அனுபவ சித்தமான முறையில் திருப்திகரமாய்க் கற்பிக்கப்பட்டு வருமானால், வேறு கைவேலைப் (Prevocational Subject) பாடம் வற்புறுத்தப்படவேண்டியதில்லை எனக் கருதுகின்றனர்.

* * *

ஒரு லக்ஷம் பெண்கள் அதிகம் படிக்கிறார்கள்

இவ்வருஷம் (1941) ஜூன் மாதத்திலிருந்து அக்டோபர் மாதத்திற்குள் இம்மாகாணத்திலுள்ள ஆரம்பப்பாடசாலைகளில் 1,00,000 பெண்பிள்ளைகள் அதிகம் சேர்ந்து படிக்கிறார்கள். இந்த சொற்ப காலத்திற்குள் இப்பெருந் தொகையினர் பள்ளி

களில் சேர்ந்திருப்பதற்குக் காரணம், நம் கல்வி டைரெக்டர் திரு. R. M. ஸ்டாத்தம் துரை அவர்களின் புது உத்தரவும் அவரது அயரா உழைப்புமே. அதாவது எந்த இடத்தில் பெண்களுக்கெனத் தனியாய்ப் பெண்பாடசாலை இல்லையோ, அந்த இடத்தில் ஆண் பாடசாலை ஒன்று இருந்தால் அதில் குறைந்த பட்சம் 25% பெண்கள் (அதர்வது அப்பிரதேசத்தில் படிக்கும் வயதுள்ள பெண்பிள்ளைகளில்) சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யாவிடில் அந்தப் பாடசாலையின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்பதாம்.

கிறீஸ்துவின் பிறப்பு

(A. Savarimuthu)

சர்வலோ காதிகாரணக் கடவுள் மானிடரின் மருள் நீ
ங்க இப்புவில் பிறந்திடச் சுதன் சம்மதங் கொண்டு
எவ்வரங்களும் நிறைவுற்ற கன்னிமரியாயி மாசிலா எழி
லூனில் உற்பவித்து மரியா ளினுடன் மாபத்துத் தங்கி ந
ர் பெத்தல் வெல்லை மலையி ன் மாடடைகுடிலில்கோவர்கள் நம
து சேசுவைப் புற்றவிசில் கிடத்திக்கழல்பணிந்து சூசைய து
ஸ் துதிமிகுந்த பாலனைமன்ன ரும் முகஸ்துதி செய்து காணிது ப
வாள்பொன்மீரைபூண்டவரன் ணை யும்பெற்றுத்திரும்பின அவர்க ள்
மிக்கக்களிப்புடன் ஏகினமை யினால்தூதன்மூவரையும்வேறுவளி
பின்னனுப்பினர்எரோதனேவி னான் கொல்ல நம் சூசை மரியா யி
எஜிப்து சென்று நசரேனூரி ல் வசித்தனர்பின்னர்கபாலமலையி ல்
எய்தார் சாவு உயிர்த்த அவர் பாதாளமீட்டுநம்மைச்சா வா
ல் இரட்சித்த சேசு புவியில் வருவார்படாவயத்தோடுஅவர்புக ழ்
டி லைத்து கிறீஸ்து நாதர் சிலுவையோடுவானில்வருவாராக

புதிய ஏற்பாட்டில் உடற்பயிற்சிக் கல்வி

(Physical Education in New Order)

1941 டிசம்பர் 22-ம் உ சென்னையில் நடைபெற்ற 8-வது "உடற்பயிற்சிக்கல்வி" மகாநாட்டில் தலைமை வகித்த Mr. H. C. Buck (Adiviser to Government on Physical Education) அவர்கள் புரிந்த உபந்நியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

தற்போது ஆண், பெண் மாணவர்களாகவிருக்கும் இளைஞர் எதிர்காலத்தில், புது சகாப்தத்தில் பொறுப்புவாய்ந்த தேச மக்களாக ஆகவேண்டியவர்களாதலின், அவர்களைப் பயிற்றுவிக்கும் நமக்குள்ள பொறுப்பும் மகத்தானதே. வரப்போகும் உலகப் புது ஏற்பாட்டில் கட்டுப்பாடான வாழ்க்கையும், ஆட்சிமுறைக்கு அடங்கி, சட்டதிட்டங்களை நன்கு மதிக்கத்தக்கதான ஒழுக்கமும் முக்கிய அம்சங்களாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. எனவே அதற்கேற்ப மாணவர்களின் உடல் நலனைப் பேணுவதிலும், அவர்களது மனத்தைப் பயிற்றுவதிலும் உடற்பயிற்சி ஆசிரியர் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும் அது அதிகமாய்விடாது. தமக்குள்ள, சம்பளக்குறைவு அந்தஸ்துக்குறைவு முதலிய பற்பல குறைகளைப் பொருட்படுத்தாமல், இளைஞரது முன்னேற்றத்தையே முக்கியமாய்க் கருதி அவர்கள்பால் பாடுபடுவது ஒரு மகிமைக்குரிய தொண்டாகும்.

உடற்பயிற்சி இயக்கம் இம்மாகாணத்தில் விசேஷவிதமாய்க் கையாளப்பட்டு வந்திருப்பதின் பயனாய் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது மெச்சத்தக்கதே; என்றாலும் உடற்பயிற்சியின் முக்கியத்திற்குற்ற அந்தஸ்து இன்னும் ஏற்படவில்லை. அரசாங்கம் கல்வி ஸ்தாபனங்களைக் கட்டாயப்படுத்துமளவும் நாம் காத்திருக்கத் தேவையில்லை. அதன் முக்கியத்தை எல்லா கல்வி ஸ்தாபனங்களும் நன்குணர்ந்து அனுசரிக்கும்படி நாம் இடைவிடாமல் உழைக்கவேண்டியது நமது கடமையாகும். ஏனெனின், தேகாப்பியாசக் கல்வியின் தத்துவங்களையும், நோக்கங்களையும், பயனையும் அனைவரும் நன்கு கண்டுணர்ந்திருக்கின்றனர் எனக் கூறுவதற்கில்லை. பந்தய விளையாட்டுகள் (games & sports) முதலிய பயிற்சிகள் நம்மை நல்வழிப்படுத்தும் சாதனங்களன்றோ! உண்மை, நேர்மை, தூய்மை, பிறரை நன்கு மதித்தல், வீரத்தன்மையை மெச்சுதல், பலவீனர்களின்மட்டில் கருணை முதலிய உத்தம குணங்கள் எதிர்கால புது ஜீவியத்தில் விசேஷ

மாய் விளங்கவேண்டும். பந்தய விளையாட்டுகளில் வெற்றிபெறு வதே முக்கிய நோக்கமன்று. அவ்விளையாட்டுகள் எவ்வளவு கண்ணியமாகவும், பாரபட்சமின்றியும், நேர்மையாயும் நடைபெறு கிறதென்ற நேர்மை முறைமையே விளையாட்டின் சிறப்பாகும். இதைப்போன்ற லக்ஷியங்களை நாம் உடற்பயிற்சிக்கல்வியின் மூலமாய்ப் புகட்டவேண்டும்.

அன்றியும் உடற்பயிற்சிக்கல்வி பாடசாலை மாணவர்கட்கு மாத்திரம் ஏற்பட்டதன்று. இது பொதுஜனக் கல்வியாக அமையவேண்டும். பொதுமக்கள் உடற்பயிற்சியில் ஊக்கம் காட்டுவதுமாத்திரமின்றி அதில் பெரிதும் ஈடுபடவும் வேண்டும். இது ஒரு முக்கிய லக்ஷியம். இதனை ஈடேறும்படிச்செய்ய சென்னைபோன்ற நகரங்களில் உடற்பயிற்சி இயக்கம் தொடங்க லாயிற்று. சென்னையில் முதன் முதலாக 1915-ம் வருஷத்தில் முதல் பொது விளையாட்டு ஸ்தலம் பொது மக்களுக்காக ஏற்படுத் தப்பட்டது. தற்போது அதைப்போன்ற 16 ஸ்தலங்கள் இந் நகரத்தில் ஏற்பட்டுள்ளன. ஆனல் 8,00,000 ஜனங்கள் உள்ள நகரத்திற்கு இவ்வளவு எவ்வாற்றானும் போதாது. இன்னும் வெகுவாய் அதிகப்படவேண்டியதாய் இருக்கின்றது. மேலும், உடற்பயிற்சிக்கழகங்களும் ஸ்தலங்களும் நகரங்களில் மாத்திர மின்றி கிராமங்களிலும் ஏற்பட்டு கிராம மக்களுக்கு ஊக்கத்தை யும் உற்சாகத்தையும் அளிக்கவேண்டும். இது உடல்பயிற்சிக் கல்வியின் மற்றொரு முக்கிய லக்ஷியமாகும். இதற்கேற்ப, சேலம், கடப்பை, ஆற்காடுபோன்ற ஜில்லாக்களில் "கிராமாந்திர விளை யாட்டு ஸ்தாபனங்கள்" ஏற்பட்டுவருகின்றன. இவ்வாறு பற் பல விடங்களில் தோன்றவேண்டியது மிக உசிதமும் அவசியமு மாகும்.

தேகப்பயிற்சியுடன் உடல் வளர்ச்சிக்காகும் உடல்நலக்கல்வி யும் (Health Education) சேர்ந்து நடைபெறவேண்டும். புது சகாப்தத்தில் இந்த இரண்டும் எவ்வளவு இன்றியமையாதன வாகும் என இங்கு விஸ்தரிக்கத் தேவையில்லை. தேகவளர்ச்சிக் கான போதிய போஷணை (உணவு திட்டம்) அமையாவிடின் தேகப்பயிற்சியினல் ஏதாவது பயன் உண்டாகுமோ? புஷ்டி தரத்தக்க உணவும், சுகாதார சுற்றுப்புறமும், தேகப்பயிற்சியும் ஒருங்கே நன்கமைந்தாலன்றி, ஒன்றுக்கொன்று சமன்செய்யப் பட்டாலன்றி நாம் பலன் எய்தமுடியாது. ஆகவே, புது உலக ஏற்பாட்டில் (New order) உடல்பயிற்சியுடன் உடல் நலனும்

(Health) நன்கு அமையவேண்டும். இவ்விஷயமாய் செய்யத்தக்கன யாவை என ஆராயவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இந்தியாவின் விமோசனத்துக்குச் சரியான மார்க்கம் இதில் தான் அடங்கியிருக்கிறதென்பதை உய்த்துணர்வோமாக.

இருசொல் அலங்காரம்

(N. R. திருவேங்கிடம்)

1.	குழந்தை அழுவதேன்? எப்படி உலகை அளந்தான் மால்?	அடியினால்
2.	குற்றம் செய்தவன் தப்பியதேன்? தர்ம சாஸ்திரம் செய்தது யார்?	மனுவினால்
3.	பெண் திருடிக்கென்ன பேர்? பாம்பு வசிக்கும் செடி என்ன?	கள்ளி
4.	உடம்பு களைப்பதேன்? பாம்பு படமெடுத்தாடுவதேன்?	பாட்டினால்
5.	அரசர் யுத்தம் செய்வதேன்? ஆடவர் சிறை புகுவதேன்?	நாட்டுக்காக
6.	நாட்டில் கிடைக்கும் கீரை எது? ராஜாக்கள் தலையில் அணிவதெது?	மௌலி
7.	ஏந்திழை வாடுவதேன்? ஏட்டில் (காகிதம்) எழுதுவதெதனால்?	மையால்
8.	மாணவர் எழுத்து திருந்துவதெதால்? மாந்தர் குடித்துக் கெடுவதெதால்?	காப்பியால்
9.	இரத்தம் வடிவதேன்? ஞானியார் நிலையற்றதெனக் கூறுவது எதை?	காயம்
10.	அரிச்சந்திரன் புகழ் பெற்றது எதால்? அரிய உயிர்க் காதாரமெது?	மெய்
11.	கத்தி கூர்மை ஆவதெதால்? சத்துள்ள அரிசி கெடுவது எதால்?	தீட்டினால்
12.	குழந்தையை உச்சி முகர்வானேன்? குளத்துப்படி வழுக்குவதேன்?	பாசத்தால்

ஜீவியத்தின் நிலையை விஞ்ஞான போதனையின் மூலம் அறிவித்தல்

(A. Antonymuthu, Asst., R. C. T. S., Trichy.)

கல்வியானது ஒவ்வொரு மனிதனையும் வாழ்க்கைக்குத் தயாராக்கிவிடவேண்டுமென்பதே தத்துவ ஞானிகளின் கொள்கையாம். விஞ்ஞானம் நமது வாழ்க்கையில் எல்லா விதமான செயல்களுக்கும் அவசியமான அறிவைக்கொடுக்கின்றது. ஆகையால் தினசரி வாழ்க்கையில் நடக்கும் பல விஞ்ஞான சம்பவங்கள், நூதனப்பொருள்கள் இவற்றுடன் சம்பந்தப்படுத்திப் போதித்த விஞ்ஞான அறிவே பிள்ளைகளுக்கு அவசியமாகும் என்பது நிச்சயம். உழைப்பு, செல்வம், சந்தோஷம் ஆகிய மூன்று வாழ்க்கை யம்சங்களிலும் சரியான நிலையை அவர்கள் அடைய வேண்டுமென்பது அவசியம். இந்த மூன்று முக்கிய நிலைகளுக்கும் அவர்களைத் தக்கவர்களாக்கிவிடவேண்டுவதே கல்வியின் அம்சமாகும். ஒரு பிள்ளை தன் பிற்கால ஜீவியத்தில் ஏற்றுக்கொள்ளவிருக்கும் சகல பொறுப்புகளுக்கும் ஆயத்தப்படவேண்டும். விஞ்ஞான போதனையின் மூலமாக உழைப்பு, செல்வம் இவற்றிற்குள்ள தொடர்பை அறிவிக்கவேண்டும். செல்வம் நிலையற்றதெனவும் உழைப்பே சிறந்ததெனவும் துலக்கிவிடக்கூடும். தற்காலத்தில் அரிய பெரிய விஞ்ஞான செயல்களை அவர்களுக்கு சித்திரித்துக் காட்டுவதிலிருந்து அவற்றிலுள்ள நுட்பங்களை சாத்தியப்படுத்தவேண்டும். விஞ்ஞான நிபுணர்கள் தங்கள் மெய்வருத்தம், தங்களுடைய ஊதியம் இவற்றைப் பொருள்படுத்தாது எவ்வளவு பாடுபட்டு அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்ற விஷயம் பிள்ளைகளுக்குப் பெரும் பயன் அளிக்கும். பிள்ளைகள் உழைப்பின் மதிப்பையும், மேன்மையையும் உணர்கிறார்கள்.

நோயற்ற வாழ்வே குறையற்ற சந்தோஷம் என்பது உண்மையே. குழந்தைகள் தங்கள் சுகத்தைப் பேணும் விதத்தை விஞ்ஞான போதனையின்மூலம் அறிவிக்கலாம். உடற்கூறு சாஸ்திரத்தைச் சுகாதாரத்தின் மூலம் கற்பிக்க முடியும். ஒவ்வொருவரும் (அனுசரிக்க) வேண்டிய தேகாப்பியாசம், சுத்த ஆகாரம், சுத்த ஆகாயம் சுவாசித்தல் முதலியவை சம்பந்தமான சுகாதார விதிகளின் அவசியத்தை வற்புறுத்திவிடலாம். அத்துடன் சுகா

தாரம் சமூக வாழ்க்கைக்குரிய தனிப்பட்ட ஓர் வழியாம் என்பதை எல்லோரும் அறியவேண்டும். சமூக சேவையின் தாற்பரியத்தைக் கற்பிக்கவேண்டும். ஆரோக்கியத்தின் அவசியமும் அதைப் பற்றிய விஞ்ஞான நிலைமையும், தேகக்கூறு சாஸ்திரமும், சுகாதார முறையும் என்பவற்றுடன் தொடர்புபடுத்திப் போதிக்கப்பட வேண்டும்.

இன்னும் பால் (ஆண் பெண்) பாகுபாடு சாஸ்திரமும் ஆரம்பத்திலிருந்தே இயற்கைப்பாடம், தேகக்கூறு சாஸ்திரம், சுகாதாரம் இவற்றால் அறிவிக்க விஞ்ஞானம் ஏற்ற சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. வாலிபத்தில் பிள்ளைகளிடத்தில் காதல் உணர்ச்சியானது வாழ்க்கைக்கே ஒரு புதிய தோற்றமாக எழும்புகின்றது. இத்தன்மையால் ஒவ்வொருவனும் மனதில் சஞ்சலமடைந்து நாணுற்று ஏகாந்தத்தை விரும்புகின்றான். இச்சமயத்தில் தேகத்தில் சில மாற்றங்கள் ஏற்படுவதால் அதைப்பற்றியும் கலக்கமடையான். எனினும் ஒவ்வொருவனும் தன்னுள் உதிக்கின்ற நுணுநுணுக்கமான ஆசைப் பற்றுதலினால் அரைகுறையாக வாழ்க்கை மர்மத்தை அறியத்துணிகிறான். ஆனால் விஞ்ஞான முறைப்படி தெரிந்துகொள்ளுவதில்லை. இதுதான் கல்வியில் ஏற்படுகின்ற குறைபாடாகும். இதனால் அநேக பிள்ளைகள் தங்களுடைய மனநிலையையும், தேகநிலையையும் கெடுத்துக்கொள்கின்றனர். விஞ்ஞான அறிவின் குறைவால் மாறுபாடான துர்ப்பழக்கங்களில் புகுந்து உண்மையான வாழ்க்கை இன்பத்தை இழந்துவிடுகின்றனர். இதனாலேயே பால்பாகுபாடுக்கல்வி அவசியமெனத் தெரிகிறது.

வாலிப மாற்றம் வருமுன் பிள்ளைகள் சுகாதார நற்பழக்க வழக்கங்களைத் தங்களுக்காகவும் தங்களின் பின் சந்ததிகளின் நன்மைக்காகவும் கண்டிப்பாய் அனுசரிக்கும்படி வற்புறுத்தப்பட வேண்டும். மேலும் நன்மாதிரிகை, தேகாப்பியாசம், சுத்த ஆகாயம், நல்லெண்ணங்கள், இவைகளின் அவசியத்தை உணர்த்துதல் வேண்டும். எப்பொழுது எப்படி இம்மாதிரியான விஷயங்களை அறிவிக்கவேண்டுமென்பதை ஜாக்கிரதையுடன் தீர்மானிக்க வேண்டும். இயற்கைப்பாடமும் விஞ்ஞான பாடமும் மேலான சந்தர்ப்பங்களை அளிக்கின்றன. தாவர விருத்தியைப்பற்றி கற்பிக்கும்போது நன்கு விளைந்த பழமும் விதையும் அவற்றின் சரியான வளர்ச்சிக்கு இன்றியமையாதன என்பதைத் தெளிவா

கக் கற்பிக்கலாம். பிராணிகளின் வர்க்க விருத்தியைப்பற்றிப் போதிக்கும்போது திடகாத்திரமுள்ள ஆண் பெண் மிருகங்களி லிருந்தே ஆரோக்கியமான கன்றுகள் பிறக்கின்றன என்பதை அறிவிக்கலாம். இத்துடன் ஒவ்வொருவனுக்கும் ஏறக்குறைய 15-வது வயதில் புதிய வாலிபப் பருவம் துவக்குகிறதென்பதும், அப்பொழுது வலிமையும் திடகாத்திரமும் பெற்றுக்கொள்ள தேகாப்பியாசம்செய்து உடலைப் பேணவேண்டுமென்பதும் போதிக்கப்படவேண்டும். மனவாக்குக் கிரிகைகளில் சுத்தமும் உன்னத நோக்கங்களும் இச்சமயத்தில் ஏற்படுத்துவதவசியம். மேலும் அவர்கள் பொருள்களின் பின்தன்மையை உணரவும், அவை தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் பிரயோஜனமென் பதையும் அறியவும் அவகாசங்கள் கொடுக்கவேண்டும். விஞ் ஞான முறைப்படி ஆரோக்கிய முறைகளைப் படிப்பித்துத் தன்ன டக்கத்தின் அவசியத்தை அறிவிக்கவேண்டும். இயற்கைக்கு மாறான வழியில் தன்னடக்கத்தைப் பிரயோகிக்கக்கூடாது என் பதையும் கற்பிக்கவேண்டும். ஆகையால் வாழ்க்கையில் நற்பழக்க வழக்கங்களின் நேர்மையான நிலையை விஞ்ஞானத்தின் மூலம் தெளிவாகப் போதிக்கலாம் என்பது இதனால் விவரமாக அறிவிக் கப்பட்டிருக்கிறது.

பகல் (Day) எப்படி உண்டாயிற்று?

ஸ்கேண்டினேவியாவில் ஜனங்கள் சொல்வதாவது:—

ஓடின் என்ற கடவுள் (God Odin) ஒரு அரக்கனுடைய தேகத்திலிருந்து உலகத்தை உண்டுபண்ணினார். அவ்வரக்க னுடைய எலும்புகளே இப்பொழுது நாம் காணும் மலைகள். பிறகு அக் கடவுளால் அழகான பாலம் ஒன்று ஆகாயத்திற்கும் பூமிக்கு மாக கட்டப்பட்டது. ஆனால் அந்தப்பாலம் எவ்வளவுதான் அழகாகவும் நேர்த்தியாகவும் இருந்தபோதிலும் அதனால் உலகத் துக்கு வெளிச்சம் கொஞ்சமும் கிடைக்கவில்லை. இருட்டும் குளிருமே உலகத்தை மூடிக்கொண்டிருந்தது.

"உதயம்" என்ற கடவுள் (God Dawn) காலையில் தூங்கி எழுந்ததும் தன்னுடைய பிரகாசத்தில் ஒரு சிறு பாகத்தை

இருட்டாயிருந்த உலகத்தில் வீசினார். ஆனால் இரவு என்ற தேவதை (Goddess Night) உடனுக்குடன் தனது அதிகாரத்தை பூமியின்மேல் செலுத்த மறுபடியும் எங்கும் ஒரே இருட்டாய்ப்போய்விட்டது.

ஆதலால் "ஓடின்" தன்னுடைய வல்லமையினால் "உதயம்" என்ற கடவுளுக்கும் "இரவு" என்ற தேவதைக்கும் பாசம் உண்டாக்கி இருவருக்கும் விவாகம் முடிக்க, அவர்கள் இருவருக்குமாக "பகல்" என்ற (Day) குமாரன் பிறந்தான். "ஓடின்," பகலுக்கு பொன்னிறத் தேர் ஒன்று கொடுக்க, அவன் அதன்மேல் ஏறி ஆகாயத்தில் தனது இரதத்தை நடத்திச்சென்றான். (அந்த இரதத்தையே நாம் சூரியன் என்கிறோம்.) பிறகு பூமியும் செழிப்புற்று ஜனங்களும் பலுகினார்கள். "பகல்" எப்பொழுதும் வாலிபப்பிராயத்தில் நிலைத்து தனது தேரை ஆகாயத்தில் நடாத்தி நன்மை புரிய, பொறாமைகொண்ட "விஷமம்" என்ற கடவுள் (God Mischief) "பகலை" அழிக்க எண்ணி பூமியைத் தன் ஆதீனத்தில் உட்படுத்தி, ஒரு சிறிய புல்லுருவியால் பாணம் ஒன்று செய்து கண்தெரியாத மற்றொரு கடவுளிடம் கொடுத்து ஆகாயத்தை நோக்கி எய்யச்சொன்னார். அப்பாணமானது, ஐயோ! அவ் வாலிப "பகலை" ஊடுறுவிப்பாய்ந்து கொன்றது. பூமியும் இருளடையவே, புதல்வனை இழந்த தேவதை இரவும், கடவுள் உதயமும் கதறி அழுதார்கள். பூமியில் உள்ள மானிடரும் முறையிட, ஓடின் கடவுள் தனது வல்லமையால் "பகலை" உயிர்ப்பித்துக்கொடுக்க மறுபடியும் பகல் தனது தேரில் ஏறி முன்னால் "உதயமும்" பின்னால் இரவும் காவல்புரிய வழக்கம் போல் தேர் ஆகாயத்தில் சென்றது.

பிறகு "ஓடின்" கடவுள் புல்லுருவியை எடுத்து அன்பு என்ற தேவதையிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தினார். தேவதையானது அப்புல்லுருவியை ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் தொங்கவிட, அதிலிருந்து அப்புல்லுருவியானது யாதொரு கெட்ட காரியத்துக்கும் உபயோகிக்க முடியவில்லை, அதிலிருந்து ஜனங்களும் அதன் ஞாபகமாக வீடுகளில் தொங்கவிட்டு சமாதானத்தின் அடையாளமாக அதன் அடியில் செல்லும்பொழுது முத்திசெய்வது வழக்கம்.

பாடக் குறிப்பு

பாடம் தமிழ் இலக்கணம் (மூன்றாவது வகுப்பு)

நோக்கம்.:—வினைச்சொல்—முதற்பாடம்.

குறிப்பு:—இங்கு இலக்கணப்பாடம் என்பது ஒரு தனிப்பாடமல்ல. வாசக பாடத்தின் ஒரு பகுதியைக் கற்பிக்கையில் மொழித் தேர்ச்சிக்கு இலக்கணப்பயிற்சியும் தரவேண்டுமாதலின், அப்பயிற்சிக்கு மாதிரியாகப் பின்வருவதைக் காண்க.

பீடிகை :—மாணிக்கம் பாடுகிறான்; நாய் குரைக்கிறது; மாடு மேய்கிறது; சேவல் கொக்கரிக்கிறது; செடிகள் வளர்கின்றன; குடியானவன் உழுகிறான். இவ்வாக்கியங்களைக் க. ப. வில் எழுதி, மாணிக்கம், நாய், மாடு, சேவல், செடிகள், குடியானவன் ஆகியவை பொருட்கள் என்றும் அவை ஒவ்வொன்றையும் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் என்றும் சொல்லச் செய்து (முன்னறிவு சோதனை) அச்சொற்கள் ஒவ்வொன்றையும் அடுத்துவரும் சொற்கள் ஒவ்வொன்றையும்பற்றி ஆராய்வதாகக் கூறவும்.

விஷயம்: மாணிக்கம் பாடுகிறான்: நாய் குரைக்கிறது: மாடு மேய்கிறது......முதலிய பீடிகையில் கண்ட வாக்கியங்கள்.

முறை: விஷயத்தில் கண்ட கோடிட்ட வார்த்தைகளைப் படிக்கச்செய்து, அவற்றிற்கும் அவ்வவ்வார்த்தைக்குமுன் இருக்கும் பதங்களுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கேள்விகள் போட்டு உணர்த்துக. உதாரணமாக, மாணிக்கம் பாடுகிறான். இதில் மாணிக்கம் செய்கிற வேலை என்ன? அத்தொழிலை அல்லது வேலையை உணர்த்தும் சொல் எது? அச்சொல் அவ்வாக்கியத்தின் கருத்தையும் காட்டுகிறதல்லவா. அதனை **வினைச்சொல்** என்போம். இவ்வாறே ஒவ்வொரு வாக்கியத்தையும் ஆராய்க.

அப்பியாசம்: I. கோடிட்ட பதங்களுக்கு ஏற்ற சொற்களை (வினை) அமைத்துப் பூர்த்தி செய்க:—(1) ஆடு தழைகள் ———. (2) ராமன் பாடம் ———. (3) குதிரை ———. (4) குழந்தை ———. (5) மழை ———. முதலியன.

அப்பியாசம்: II. பாடப்பகுதியில் வினைச்சொற்கள் கண்டுபிடி. (வாசக பாடத்தில்.)

பரீட்சை: பெயர்ச்சொல், வினைச்சொல் அடங்கிய வாக்கியங்கள் 4 கூறுக. உன் விடைக்குக் காரணமும் தரவேண்டும்.

கிராமக் கல்விப் பிரசாரம் 3

A. A. Muthu

ஆசிரி.: காலை வந்தனம் ஐயா. ஏது, தாங்கள் எனக்காக வெகுநேரம் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்போலிருக்கிறதே! இவ்வளவு தாமதமாய் வர நேர்ந்ததைப்பற்றி மன்னிக்கவும்.

1-ம் கிராம.: வாத்தியாரே வாருங்கோ. நீங்கள் வருவதற்காகத்தான் இந்நேரமட்டும் காத்திருந்தோம்... ஏன்... கூட்டத்தை ஆரம்பிக்கலாமே.

2-ம் கிராம.: முந்திய கூட்டத்தில் பயிர்த்தொழிலுக்கு கல்வி அவசியம் என்று சொன்னீர்களே, அதைக் கொஞ்சம் விளக்கிச் சொன்னால் நலமாயிருக்கும்.

ஆசிரி.: ஆமாம். அதைப்பற்றி இன்று எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். மேல் நாடுகளில் தொழிலாளிகளெல்லாம் பெரிய பணக்காரர்கள் என்று சொன்னேன், ஞாபகம் இருக்கிறதா?

3-ம் கிராம.: ஆம் சொன்னீர்கள். அதற்கென்ன?

ஆசிரி.: மேல் நாடுகளில் எல்லாத் தொழிலுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. விவசாயத்திற்காக, கல்லூரிகள் ஏற்படுத்தி பயிர்த்தொழிலை எங்ஙனம் நடத்தி சிறந்த பயனைப்பெறுவது என்பதைக் கற்றுக்கொடுக்கின்றனர்......

1-ம் கிராம.: என்ன! விவசாயம் செய்யக்கூடவா பள்ளியில் சேர்ந்து பயிலவேண்டும்! ஏன் நமக்குத்தான் பகவான் கொடுத்த அறிவில்லையா? அல்லது நமது முன்னோர்கள் செய்துவந்த முறையை நாங்கள் அறியாதவர்களா? சரியாய்ச் சொன்னீர்கள்!

ஆசிரி.: ஐயா, ஆத்திரப்படவேண்டாம். பத்து வந்தாலும் பதற்றம் ஆகாது. காலமானது மாறி விஞ்ஞான அறிவு அதிகப்படும் இக்காலத்தில் ஒவ்வொரு தொழிலுக்கும் பயிற்சி பெறுதல் அவசியமாகக் கருதப்படுகிறது. மேலும் உழுதொழிலில் பயிற்சி பெற்றிருந்தால் இதைவிட மேலான முறையில் நடத்திப் பயனடையலாமல்லவா? இதையறியாதே நம்நாட்டு விவசாயிகள் 'உழுதவன் கணக்குப்பார்த்தால் முழக்கயிறுகூட மிஞ்சாது' என்றமுறையில் உழைத்தும் பயனடையாது போகின்றனர்.

3-ம் கிராம.: அதிருக்கட்டும். விவசாயக் கல்லூரிகளைப் பற்றி ஏதோ சொன்னீர்களே. அது என்ன?

ஆசிரி.: விவசாயக் கல்லூரியில் மாணவருக்கு நவீன முறைகளைக் கையாடி விவசாயம்செய்து காட்டுகின்றனர். புதிய

முறைகளெல்லாம் அங்கு கையாளப்படுகின்றன. கலப்பை முதலிய விவசாயக் கருவிகளின் நேர்மை, விதைகளின் குணதோஷங்கள், எருக்களின் தன்மை, எருக்களைச் சேகரிக்கும் விதங்கள், மண்ணின் மாறுபாடுகள், நீர்ப்பாசனத்தைக் கண்காணித்தல், பயிர்களின் மாற்றம், பயிர்களின் நோய்கள், பயிரழிக்கும் பூச்சிகள், அவற்றைத் தொலைக்கும் முறைகள் அனைத்தும் நேர்முகமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. அம்முறைப்படி பயிர்த் தொழில் செய்து ஒன்றுக்கு நூறாய் லாபமடைந்து காட்டுகின்றனர். விவசாயிகளுக்கு இவற்றைப்பற்றி அறியப்பண்ண பல விவசாய சங்கங்களை நமது காருண்ய அரசாங்கத்தார் நிறுவியிருக்கின்றனர்.

2-ம் கிராம.: ஆஹா! இதுவரை எங்களுக்கு இவ்விஷயத்தைப்பற்றித் தெரியாதே. எங்கள் பிள்ளைகளுக்கும் இதைப் பற்றிக் கொஞ்சம் பயிற்சி கொடுத்தால் நலமாயிருக்குமே.

ஆசிரி.: என்ன நமது பள்ளிக்கூடத்தில் இதற்காக ஒரு தோட்டம் இருப்பது உங்களுக்குத் தெரியாதா?

கிராம.: இதற்காகவா தோட்டம் வைத்திருக்கிறீர்கள். இதுவரை பள்ளிக்கூடத்தோட்டத்தின் மகிமையை அறியாதிருந்தோமே.

ஆசிரி.: நமது காருண்ய கவர்மெண்டார் கிராமங்களை முன்னேற்றவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு ஆயிரக் கணக்கான ஆரம்பப்பாடசாலைகளைப் பற்பல இடங்களிலும் நிறுவி, பையன்களுக்குப் பிற்கால வாழ்க்கையில் பயன்படும் தொழிற் பயிற்சியையும் கற்றுக்கொடுக்கும்படி வற்புறுத்துகிறார்கள். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு தோட்டம்போட்டு அதை அடிப்படையாக வைத்து மற்ற தொழில்களையும், பாடங்களையும் கற்றுக்கொடுத்துவர வற்புறுத்துகிறார்கள். புதிய விவசாய முறைகளையும் பாடசாலையில் நடத்திக்காட்டி ஊராருக்குப் பயன்படச் செய்யச் சொல்லுகிறார்கள். ஆகவே தற்பொழுது பாலர்களுக்குப் போதிய தொழிற் பயிற்சியையும் கல்வியுடன் சேர்த்துப் புகட்டி வருகின்றோம்.

1-ம் கிராம.: ஆமய்யா. தாங்கள் சொல்வது வாஸ்தவம் தான், கல்வியறிவில்லாதவன் கால்மனிதன் என்று சொல்லுவது பொய்யல்ல. மேலும், மேல்நாடுகளில் தொழிலாளிகள் படித்தவர்களாயிருக்கிறதினால்தான், முதலாளிகளாகவும், நாடு முன்னேற்றமடையக் காரணமாயுமிருக்கின்றனர்.

ஆசிரி. : நம் நாட்டின் முன்னேற்றம் நம் கையில்தானிருக்கிறது. இனிமேல் நம் பிள்ளைகளையாவது பள்ளிக்கனுப்பி, படிப்பறிவும், தொழில் பயிற்சியும் பெறச்செய்து, பின்னல் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தச் செய்வது நம் மேல் சுமந்த கடமையல்லவா ?

2-ம் கிராம. : ஆஹா ! சுருக்கத்தில் சொல்லிவிட்டீர்களே. பிள்ளைகள் யாவரும் படித்து அறிவு பெறுவது மிகவும் அவசியம். ஆனல்......

ஆசிரி. : ஆனல் என்ன ?

1-ம் கிராம. : கேளுங்களேன். நாங்களே நாள் முழுதும் வயலில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. வீட்டு வேலைகளைப் பார்க்கத்தான் பெண்களுக்குச் சரியாயிருக்கிறது. இந்நிலையில் அழும் பிள்ளைகளைத் தூக்கி வைத்துக்கொள்ளுவதார் ? ஆடு, மாடு மேய்ப்பது யார் ?

ஆசிரி. : ஈசன் உங்களுக்குப் புத்திர செல்வத்தைக் கொடுக்காமலிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது இந்த ஆடுமாடுகளைக் கவனிப்பதார் ?

2-ம் கிராம. : பூ, இதற்குத்தான பிரமாதம். ஓர் சம்பள ஆளை நியமித்து ஆடுமாடுகளை மேய்க்கவிடுகிறது.

ஆசிரி. : வந்துவிட்டீர்களா வழிக்கு. இப்பொழுதும் அப்படியே செய்துவிட்டால்போகிறது.

3-ம் கிராம. : ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சம்பள ஆள் நியமிக்கவேண்டுமென்றால் சாமான்யமான காரியமா ? அவர்களுக்குக் கூலி கொடுக்க எல்லோராலும் இயலும் காரியமா ?

ஆசிரி. : இதற்கு நானொரு உபாயம் சொல்லுகிறேன். கேளுங்கள் கிராமத்திலுள்ள யாவரும் ஒன்றுசேர்ந்து பொதுவில் ஒன்றோ அல்லது இரண்டோ கூலியாட்களை நியமித்து ஆடுமாடுகளை மேய்த்துவரச் செய்தல் நலமாயிருக்கும். ஒவ்வொருவரும் சொற்பக்கூலி கொடுத்தால்போதும். அவருக்குத் திரண்ட சம்பளமாகும். உங்கள் பிள்ளைகளும் பள்ளிக்கு வரத் தடையிருக்காது.

கிராம. : ஆஹா ! சரியான யோசனை. இனிமேல் அப்படியே செய்கிறோம். எங்கள் பிள்ளைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்பிவைக்கிறோம்.

ஆசிரி. : அப்படியே செய்யுங்கள். போய்வருகிறேன்.

கிராமத்தார் : வந்தனம். போய்வாருங்கள்.

ஞயம்பட உரை

(ஓர் சம்பாஷணை)

[A. Appasami, *Teacher*, *Tindivanam.*]

ராஜம் : அடி சச்சு எங்கே போகிருய் ?

சச்சு : நான் பாடசாலைக்குப் போகிறேன்.

ராஜம் : நானும் கூடத்தான் வருகிறேன் ; இருவருமே போகலாமே.

சச்சு : ஏண்டி ! நமக்குப் புது டீச்சர் வந்திருக்கிருர்களே அவர்களைப் பார்த்தால் சாந்தஸ்ரூபியைப்போலல்லவோ தோன்றுகிருர்கள் ? அவர்கள் நம்மிடம் பேசும்போதும், பாடம் நடத்தும்போதும், என்ன உற்சாகத்துடனும், சந்தோஷத்துடனும் இருக்கிருர்கள்.

ராஜம் : அதோ கமலமும் வருகிருள் நில் அவளுடன் சேர்ந்து போகலாம்.

கமலம் : ஏது நீங்கள் இருவரும் என்னைக் கண்டதும் நின்றுவிட்டீர்கள் ?

ராஜம் : உன்னுடன் சேர்ந்து பள்ளிக்கூடம் போகலாம் என்றுதான்.

கமலம் : சரி வாருங்கள் போவோம். நாம் போகிற வழியில் ஒரு குளம் இருக்கிறதே அதைப் பார்த்திருக்கிறீர்களா ?

சச்சு : அதைத் தினம் பார்த்துக்கொண்டுதானே பாடசாலைக்குப் போகிறோம் ? அதில் யாரும் குளிப்பதில்லை ; தண்ணீரும் எடுப்பதில்லை ; அதைப்பற்றி என்ன ?

கமலம் : அது ஏன் என்று பார்ப்போமே ?

ராஜம் : ஏண்டி நம் டீச்சர்தான் இன்று முதல் பீரிடு வரப் போகிறதில்லை. உங்களுக்குத் தெரியுமா ?

சச்சு : ஏன் வரப்போகிறதில்லை ?

ராஜம் : அவர்களுக்குத் தலைவலியாம், ஜுரமாம் ; ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து சாப்பிட்டுவிட்டு இரண்டாவது பீரிடுதான் வருவார்களாம்.

கமலம் : அப்போ நாம் இரண்டாவது பீரிடுதானே போக வேண்டும் ? அதற்குள் இக்குளத்தில் குளித்துவிட்டுப் போகலாமே ?

சச்சு : நான் மாட்டேனம்மா ! என் அம்மாளுக்குத் தெரிந்தால் என்னை வெய்வாள், நையப்புடைப்பாள் ; நான் மாட்டேனம்மா, மாட்டேன்.

ராஜம் : இங்கு யாரடி நம்மைப் பார்த்துவிட்டுப் போய் ஆத்திலே சொல்லப்போரு ? வாடி ! வா !!

(மூவரும் அழுக்கு நிறைந்த அந்தக் குளத்தில் ஆடிப் பாடி குளிக்கின்றனர். அவ்வழியே ஒரு பெரியார் வருகிருர்.)

பெரியார் : குழந்தைகாள் ! ஏன் நீங்கள் இந்தப் பாழ் குளத்தில் ஆடுகிறீர்கள் ? அதில் எவ்வளவு அசுத்தம். பக்கத்திலுள்ள மரங்களின் தழைகள் விழுந்து அழுகிவிட்டிருக்கிறதே ! இது உங்கள் சரீரத்திற்கு ஆகாது. உடனே ஜுரம் வந்துவிடும். கரை ஏறுங்களம்மா ; கரை ஏறுங்கள்.

ராஜம் : அடக் கிழப் பரதேசியே ! உன் பிரசங்கத்தை யாரும் கேட்கவில்லை ; வந்த வழியே போ ! நீ என்ன எங்களுக்குச் சொல்வது ; நாங்களென்ன அதைக் கேட்பது.

கமலம் : கண்ணப்பாரு காக்காக் கண்ணு ; மூக்கப் பாரு முந்திரிகொட்டை ; வாயைப்பாரு வண்ணுஞ்சானு ; போரும் போரும் உன் குட்டிப் பிரசங்கம். போ ! தாத்தா போ !!

பெரியார் : நான் நல்லதை சொன்னேனம்மா ! எல்லா வியாதிகளுக்கும் காரணம் அசுத்தத் தண்ணீர். வியாதிக் கிருமிகள் எல்லாம் அசுத்தத் தண்ணீரில்தான் உற்பத்தியாகிறது என்று நீங்கள் படித்திருப்பீர்கள் ? இப்பொழுதே பாருங்கள் என்ன துர் நாற்றம் வீசுகிறது. நான் வயது சென்றவன். நல்லதைச் சொன்னேன். நீங்கள் இஷ்டமிருந்தால் கரை ஏறுங்கள் ; என் வழியே நான் போகிறேன். " ஏழை சொல் அம்பலம் ஏறுமா ? "

(பெரியவர் போகிருர்)

சச்சு : அடி ராஜம், கமலம், நம் டீச்சர்கூட சொல்லி இருக்கிருர்களே ; அழுக்குத் தண்ணீரைத் தொடவேகூடாது என்று ; வாங்கடி போய் பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வோம்.

(மூவரும் ஓடுகிருர்கள்)

சச்சு : நாங்கள் தெரியாமல் செய்த பிழையை மன்னிக்க வேண்டும்.

ராஜம் : இனிமேல் பெரியோர் சொற்படி நடப்போம்.

182304
00 008

கமலம்: மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்ற மூதுரையை உணர்ந்தோம்.

யோகி: நான் உங்களுக்கு நயம்பட சொன்னதால் என் வார்த்தையைக் கேட்டீர்கள். அதுபோல் எதற்கும் நீங்கள் நயமாகப் பேசவேண்டும். இனிய மொழியால் வெற்றியாகாத காரியமே கிடையாது. இதனுல்தான் ஔவைப் பிராட்டியார் "ஞயம்பட உரை" எனக் கூறியுள்ளார். "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்"

மூவரும்: அப்படியே எல்லோரிடமும் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்ளுகிறோம்.

ஜலதோஷம் (Cold)

(A. Alphonse Fernando)

"ஜாண் பாம்பானுலும் முழக்கோல் கொண்டடி" என்பதற்கொப்ப எந்தச் சிறு வியாதியையும் அலட்சியம் பண்ணுமல் அதை உடனே நீக்குவது நம்மைச் சார்ந்த கடனுகும். இவ்வித அற்ப வியாதிகளுக்குள் ஜலதோஷம் (Cold) என்பது ஒன்று. சாதாரண ஜலதோஷம் அற்பமானதுதான். எனினும் இது இன்புளூவென்ஸா, கபஜுரம், வைசூரி முதலிய அபாயகரமான வியாதிகளை உண்டாக்க ஏதுவானது. வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சாலவும் சிறந்தது.

பரவும் விதம்:—உஷ்ணமான இடத்தில் அதிகநேரம் இருந்துகொண்டு திடீரென்று குளிரான இடத்திற்குப் போவதினுலும், ஈரமான வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளுவதினுலும், குளிர் தேகத்தில் படும்படியான இடத்தில் உட்கார்ந்திருப்பதினுலும், ஈரமான இடத்தில் படுத்திருப்பதினுலும், தேகத்தின் தோல் சுருங்கி வியர்வை தடைபடுவதினுலும், இன்னும் ஜலதோஷமுள்ளவன் தும்மினுலும் இருமினுலும் இக்கிருமிகள் பரவி சௌக்கியமானவரைப் பற்றிக்கொள்ளும். ஆகவே ஜலதோஷம் யாவருக்கும் எளிதில் தோற்றக்கூடிய வியாதியாகும்.

அறிகுறிகள்:—தோல் வழியாய்ச் செல்லவேண்டிய நீர் கண், மூக்கு வழியாய் வடியும். குளிர், தலைக்குத்து, காய்ச்சல், இருமல் முதலியவை முக்கிய அறிகுறிகள்.

சிகிச்சை :—

1. தகுந்த தேகாப்பியாசம் செய்வது. அல்லது வியர்வை வரத்தக்கதாக முரட்டுத் துவாலையால் தோல் சிவக்கத் தேய்ப்பது. உஷ்ண நீர்-பாதஸ்நானம் (Hot water bath) செய்துகொள்வது. அதாவது: வென்னீருக்குள் பாதங்களை ஏறக்குறைய 15 நிமிஷங்கள் வைத்திருப்பது. கொதிக்கிற ஜலத்தில் காப்பித்தூளைப் போட்டு அல்லது சுடு செங்கல்லைப் போட்டு முகத்துக்குமுன் வைத்து போர்வையால் மூடிக்கொள்வது. பால் சாம்பிராணி ஏற்றது (Gum Benzine) சூடான கஞ்சி அல்லது தேயிலை பானங்கள் அருந்துதல். கம்பளியால் தேகத்தை மூடிப் படுத்துக்கொள்ளுதல். சூடகத் திராவகம் (Spirits of camphor) சர்க்கரையில் ஆறு முதல் பத்துத் துளி வரையில் விட்டு சாப்பிடுவதினாலும் வியர்வை உண்டாகும்படி செய்யலாம். மேற்கூறிய யாவும் வியர்வை உண்டாக வழிகள்.

2. அரைக்கால் பலம் சுக்கை நொருக்கிச் சட்டியில் போட்டு ஆழாக்குத் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கஷாயமாக்கி பனைவெல்லம் (கருப்புக்கட்டி) சேர்த்துக் குடிக்கலாம். அல்லது சுக்கைப் பொடியாக்கி பனைவெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

3. திப்பிலியை வறுத்துச் சூரணமாக்கி, தேனில் குழப்பி சுண்டைக்காய்ப் பிரமாணம் சாப்பிடலாம்.

4. நெஞ்சுச்சளி பிடித்திருப்பின் தவிட்டை வறுத்து நெஞ்சிலும் முதுகிலும் ஒத்தடங்கள் கொடுக்கலாம். வென்னீராலும் ஒத்தடங்கள் செய்யலாம்.

5. வெங்காயத்தை (உள்ளி) அரைத்து நெற்றியில் பூசலாம்.

தடுக்கும் முறை :—நல்ல தேகாப்பியாசம் செய்தல். களைப்போடு இருக்கும்போது தண்ணீரானாலும் வென்னீரானாலும் சாப்பிடக்கூடாது. ஆனால் அதிக தாகமாயிருந்தால் வாயை தண்ணீரால் அலம்பிக்கொள்ளுதல் நலம். வியாதியுள்ளவர்கள் வேலை செய்யாது ஓய்வு எடுத்தல். நல்ல புஷ்டி தரக்கூடிய உணவுகளை அளவோடு உண்ணுதல். பெருஞ்சந்தடியுள்ள இடங்களுக்குச் செல்லாமல் (சந்தை, கடைத்தெரு முதலியன) நல்ல காற்றோட்டமான இடங்களுக்கு உலாவச் செல்லுதல். ஸ்நானம் செய்தபின் தலையை நன்றாய் உலர்ந்த துவாலையைக் கொண்டு ஈரமில்லாதபடி உலர்த்துதல். இவைகளால் ஜலதோஷம் வராது காக்க ஏற்ற வழியாம்.

நமது சரடு

(கொத்து 32. மலர் 5, பக்கம் 139-ன் தொடர்ச்சி.)

"ஸ்லை...என்னய்யா...உங்களுடன் சங்கடமாக இருக்கின்றது...என்ன கதையைத்தான் சொல்லட்டும்...இம்...சரி... எங்களூரில் நடந்த ஓர் சிறு சம்பவத்தைச் சொல்லுகிறேன்... கேளுங்கள்" என்று சொல்லிக்கொண்டு கதையை ஆரம்பித்தார். "இ...ம்...இதுபாருங்கள்...எங்களூரில் ஓர் சிறு பள்ளிக்கூடம் இருக்கின்றது. அதில் இரண்டு உபாத்திமார் வேலை பார்க்கின்றார்கள். பிள்ளைகளும் நிறைய வருகின்றார்கள். பள்ளிக்கூடமும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. நல்ல மதிப்புத்தான். இன்னும் இன்ஸ்பெக்டரும் அடிக்கடி வந்து பார்வையிடக்கூடிய இடமாக இருந்தது. வரும்போதெல்லாம் நல்ல ரிமார்க்குகள்தான் கிடைக்கும். பள்ளிக்கூடம் மென்மேலும் வளர்ந்தது. மூன்றாவது உபாத்தியாயர் ஒருவர் அப்பள்ளியில் வைக்கவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இப்போது மூன்று பேர் வேலைசெய்கின்றார்கள்.

ஓர் நாள் மாலை நேரம். சுமார் $3\frac{1}{2}$ மணி இருக்கும். அன்று புதன்கிழமை. தலைமை உபாத்தியாயர், மாணவர்களை ஏதாவது படிக்கும்படி செய்துவிட்டு, ஆடைகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு, எண்ணெய் ஸ்நானம் செய்ய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தார். மேஜையில் எண்ணெய் சீசா இருந்தது. மாணவர்கள் சிலர் பேசி விளையாடிக்கொண்டும், மற்றும் சிலர், ஏதோ எழுதிக்கொண்டும், இன்னும் சிலர் ஏதோ வாசித்துக்கொண்டும் இருந்தார்கள். வகுப்பில் இரைச்சல் அதிகமாக இருந்தது. இந்நேரத்தில், இன்ஸ்பெக்டர் துவிச்சக்கர வண்டியில் வந்து அங்கு இறங்கி பள்ளிக்குள் நுழைந்தார். அங்கிருந்த கோலத்தையும் கண்டார். அவருக்கே தன்னை அறியாமலே சிரிப்புண்டானது. நாற்காலியில் உட்காரச் சென்றார், எண்ணெய்யாக இருந்தபடியால் உட்காரமுடியவில்லை. அடுத்த வகுப்பு உபாத்தியாயருடைய நாற்காலி கொண்டுவரப்பட்டது. அதில் அமர்ந்தார். உபாத்தியாயர் இருந்த நிலையை இன்னும் சொல்லவாவேண்டும், ஐயோ...பாவம்...என்ன செய்வார். என்னதான் பேசுவதென்று தெரியாமல் விழித்தார். பின் இருவருக்கும் ஓர் சிறு சம்பாஷணை நடந்தது, எங்களுக்கு வெகு வேடிக்கையாக இருந்தது. கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்

தோம். அவரோ இதை சம்பாஷணையாக நடித்தே காண்பித்தார். இன்னும் கேளுங்கள், ரொம்ப தமாஷாக இருந்தது.

(சம்பாஷணை) இன்ஸ். : " என்னுங்கசார்...என்ன பாடம்... என்ன...செய்தி, ரிஜீஸ்டர்களெல்லாம் எங்கே."

உபாத். : (உபாத்தியாயர் சுதாரித்துக்கொண்டார்) " ரிஜிஸ்டர்களெல்லாம் ட்ராவரில் இருக்கின்றன சார்."

" அது...சரி...இப்போது என்ன பாடம் சார்."

" சுகாதாரம்...அதில் குளித்தல், என்பதை போதிக்கின்றேன்...சார்.

" ஓஹோ !...அப்போ...செய்துகற்றல் முறையை அனுசரிக்கின்றீரோ...அதுவும் சரி...ரொம்ப சரி. அப்படினு மற்ற வகுப்புகளுக்கு இடைஞ்சலாக இருக்குமே. வெளியே கூட்டிச் சென்று கற்றுத்தரலாமே... " ?

" இம்...இல்லே சார், இதற்கெல்லாமா வெளியேபோகவேண்டும்...இங்கு முடியாத காரியங்களானுல் சரிதான்... "

" அப்போ, இனிமேல் செய்யவேண்டிய காரியத்திற்கு இங்கு என்ன செய்வீர்...எண்ணெய் தேய்த்தல் ஒரு பீரியட் அப்புறம் தண்ணீர் இழுத்துக் குளித்துக்காட்டுதல் ஒரு பீரியட் போலும். ஆகையினுலே அடுத்த பீரியட் வெளிக்கூட்டிச் சென்று போதிப்பீர்போலும். இது நல்ல...வழிதான் சார், மாணவரும் கற்றுக்கொள்ளுவார்கள்...உங்களுக்கும் வேலே சிரமமில்லாமல் முடிந்துவிடும் " என்று முகத்தை சுண்டிப் பேசினர். பின் பிள்ளேகள் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். ஓர் மாணவன், தன் கையில் ஓர் புஸ்தகம் வைத்திருந்தான். அவனேக் கண்டதும், " டேய் தம்பி, அது என்ன புஸ்தகம்." " சார், இங்லீஸ் புக் " என்ருன் பையன். " இங்கே கொண்டுவா... " என்று கேட்டு, வாங்கிப்பார்த்தார். முதல் பாடத்தில், " God made the world " என்று முதல் வரியாக இருந்தது. அவர் பார்த்தவுடன், " இங்கிலீஷ் யார் சொல்லிக்கொடுக்கிறது " என்ருர். " என் அண்ணன்...சார் " என்ருன் பையன்.

இன்ஸ். : சரி, God made the world. அர்த்தம் கூறுடா தம்பி.

பையன் : " God—காடானவர், the world—வோர்ல்டை, made—மேடினர் " என்ருன்.

இன்ஸ்பெக்டருக்கு சிரிப்பும் கோபமும் வந்தது; புஸ்தகத்தை அவன் முகத்திலேயே எறிந்தார். பின்னும் ஓர் பாடம் அவரே கற்றுக்கொடுத்தார்.

எல்லோரும் இங்கே கவனியுங்கள் :—

“ நரிக்கு எத்தனை கால்கள் ? ”
“ நான்கு சார்.”

“ நரிக்கு எத்தனை கழுத்து ? ”
“ ஒன்று சார்.”

“ நரிக்கு எத்தனை வயிறு ? ”
“ ஒன்றுசார்.”

“ சரி, நரிக்கு எத்தனை வால் ? ”
“ ஒன்றுசார்.”

“ நரிக்கு எத்தனை தலை ? ”
“ ஒன்று சார்.”



இவ்விதமாக நரியை வர்ணித்து, கேள்விகள்மூலமாக படம் வரைந்தாற்போல், உருவம் வரைந்தாற்போல் **நரி** என்று எழுதிக் காட்டினார். மாணவர் எல்லோரும் விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்குள் பள்ளிககூடமும் முடிந்தது. மணியும் 5 அடித்தது. பள்ளியில் மாணவர்களின் சப்தமும் எழும்பியது. இன்ஸ்பெக்டர் பின்னர் ஓர் நோட்டு புஸ்தகத்தில் ஏதோ எழுதினார்; துவிச்சக்கர வண்டியை எடுத்தார். புறப்பட்டுச் சென்றார். உபாத்திமார்கள் மூன்றுபேரும் கூடி என்னென்னமோ பேசிக்கொண்டிருந்தார்கள். இவ்வளவுதானய்யா கதை... சரி மழையும் நின்றுவிட்டது, நானும் போகின்றேன்” என்று சொல்லிக்கொண்டே விரைந்து சென்றுவிட்டார்.

(தொடரும்.)

‘ கை ’ எழுதியது.

ஓர் ருசிகர சம்பாஷணை

(S. E. Arul Raj)

[பள்ளிக்கூடத்தோட்டம். பரிசோதனைப்பாத்தியில் ஓர் அவரைச் செடி முளைத்து வளர்ந்திருந்தது. அவ்விலையைக் கடித்துச் சாப்பிட ஓர் கம்பளிப்பூச்சி அதில் ஏறி இலையில் இருந்துகொண்டு கடிக்க ஆரம்பித்தது.]

அ. செடி: உன்னைப்போல உயிருள்ளவன்தானே நான். ஏன் என்னை இப்படிக் கடித்து வதைக்கின்றாய்.

க. பூச்சி: என்ன! உயிருள்ளவனா? நீ கூடவா என்னைப் போல் பிறப்பெடுத்து வந்தாய்.

அ. செடி: ம்...உனக்குத் தெரியாது போலிருக்கு. என் வரலாற்றைக் கூறுகிறேன் கேள். சில நாளைக்குமுன் விதைகள் என்ற பேருடன் இருந்தோம். ஓர்நாள் 4, 5 விதைகளை வகுப்பில் வைத்துக்கொண்டு ஆசிரியரும் பிள்ளைகளுமாக எங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். எங்களைச் சோதிக்குமுன் எங்களுக்கும் ஒற்றைப்பருப்புடைய விதைகளுக்கும் வித்தியாசத்தைச் சம்பாஷித்தனர். பின் ஆசிரியர் எங்களில் 2 விதைகளை எடுத்து இரண்டாய்ப் பிளந்து, முதலில் தழும்புபோலிருந்ததைப் பீஜத்தழும்பு என்றும், அதன் ஓரத்தில் உள்ள துவாரத்திற்கு அண்ட விவரம் என்றும், பின்தோலை உரித்து, மேல் தோல், உள்தோல் என்றும், இரு பருப்புகளை அங்குரதளமென்றும், அவைகளின் இடையே ஒட்டிக்கொண்டிருப்பது கருச்செடி என்றும், அச்செடியே பிரதான தண்டு, இலையாகவும், பிரதான வேராகவும் முளைத்துவரும் என்றும் ஒவ்வொரு பாகத்தையும் காட்டிக்கூறினர். அதன்பின் ஒரு விதையை முளைக்கப்போட்டுப் பரிசோதனை பார்ப்போமென்று என்னை இப்பாத்தியில் முளைக்கப்போட்டனர். எனக்குப் போதிய உஷ்ணமும், தண்ணீரும், நல்ல இடமும் வசதியாக இருந்ததால் முளைத்து இரு கதுப்புக்களுடன் தரையை முட்டி வளைந்து இரு பச்சைக் கதுப்புக்களுடன் வந்தேன். சிறிது நாள் வேர் சரியாக ஊன்றி ஆகாரம் எடுக்கும்வரை எனக்கு அக்கதுப்புக்களே உணவு அளித்தன. பின் அவைகள் சுருங்கி விழுந்துவிட்டன. நான் முதலில் இரு பெரிய இலைகளை வெளிவிட்டேன். அதன்பின்தான் பின்னப்பத்ரம் என்ற மூன்று இலைகளைவிட்டு வளர்ந்து வந்தேன்.

க. பூச்சி: ஆம் அண்ணே! நிலக்கடலைச் செடியைப் போய்ச் சேதம் பண்ணினேனே—அதுவும் உன்னைப்போலவா முளைத்து வளர்ந்து வருகிறது?

அ. சேடி: ஆம். அச்செடியையும் சேதம்பண்ணுதே.

க. பூச்சி: ஆமணக்குச் செடி, கொண்டைச் செடி, முதலியவைகளும் உன்னைப்போலவா முளைத்துவருகின்றன.

அ. சேடி: கொஞ்சம் வித்தியாசம் உண்டு. ஆமணக்குச் செடி தன்கதுப்புக்களை இலைகளாக மாற்றிக்கொண்டு வரும். கொண்டச்செடி, ஒற்றைப்பருப்புச் செடியைப்போல், அங்குரதளங்கள் பூமிக்குள்ளேயே நின்றுவிடுகின்றன. குருத்தில் வரும் இலைகளோ பின்ன இலைகளாக இருக்கின்றன. இப்படி முளைத்து வரும் எங்களை நீ கடித்து வதைக்கலாமா?

க. பூச்சி: வதைக்கக்கூடாதுதான்! சரி வருத்தப்படாதே. நான் போய்விடுகிறேன்.

அ. சேடி: ஆம் அண்ணே! நீங்கள் அதிகச் சேதம் செய்வதினுல்தான் உங்களைப் பிடித்து எரித்துவிடுகிறுர்கள். அல்லது மண்ணெண்ணெயில் போட்டுக் கொன்றுவிடுகிறுர்கள். எங்கள் பள்ளிப் பிள்ளைகள் வரும் சப்தம் கேட்கிறது. உடனே ஓடிப்போ! இல்லாவிட்டால் உன்னைப் பிடித்துக் கொன்றுவிடுவார்கள். (தொடரும்)

விடுகதை

கூண்டிலே யிருக்குமது பட்சியல்ல
கொழுந்தோடிப் போகுமது இரைதின்னுது
காட்டிலே விட்டுவிட்டால் பறந்தேபோகும்
கனத்த மன்னர் வாசலிலே காவல்காக்கும்
ஈட்டி கத்தி பிடித்தவர்க்கெதிரே செல்லும்
இராவழி நடப்பவர்க்குத் துணையேயாகும்
காலேயில்லை யிதனை யெமக்குக் காட்டுவீரே.

* * *

இது என்ன?

1. அள்ள முடியும்; கிள்ள முடியாது.
2. ஆகாயத்திற்கும், பூமிக்கும் ஆயிரம் ஆயிரம் கம்பிகள்.
3. தாயார் சமுத்திரம்தான்; தந்தையார் சூரியனுர், தரணியில் எனைக்கொண்டு தாங்காத வீடில்லை.
4. முள்ளம் பன்றி வயிற்றுக்குள்ளே வைக்கோல் குடல்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

13–12–'41 ஸ்ரீமான் C. Raghunathan B.A., L.T., T.D. (Lond.) திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் திருச்சி, ஸ்ரீரங்கம் முனிசிபால்ட்டிகளுக்குட்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் பந்தய விளையாட்டுகள் (Sports) பிஷப்ஹீபர் பாடசாலை விளையாடுமிடத்தில் (தெப்பக்குளம்) வெகு சிறப்பாய் நடைபெற்றது. இப்பந்தய விளையாட்டுகளின் தலைவர் நமது டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள்தான். அதற்கு உதவியாக ஸ்ரீமான் உதவி டிப்டியவர்களே. பந்தய விளையாட்டுகள் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டன. அப்பந்தய ஓட்டங்களிலெல்லாம் எம் மாதிரிப் பாடசாலை மாணவர்கள் 12 பேர் பங்கெடுத்துக்கொண்டார்கள். இவர்கள் பல்வேறு விளையாட்டுகளில் சேர்ந்திருந்தனர். ஒவ்வொன்றிலும் எம் மாணவர் முதலாவதாகவோ அல்லது இரண்டாவதாகவோ வெற்றி பெற்று வந்தனர். மொத்தம் 73 பாடசாலைகளினின்று மாணவர்களும், மாணவிகளும் கலந்துகொண்டனர். ஆண்களுக்கு வேறு ஆட்டங்களும், பெண்களுக்கு வேறு ஆட்டங்களும் ஏற்பாடாகியிருந்தன. மேலும் ஒலிபரப்பியில் (Radio) மாணவ மாணவிகள் தங்கள் சங்கீத திறமையை வெளிப்படுத்தினர். நம் மாணவர் சிலரும் அதில் வெகு திறமையாகப் பாடினார்கள் என்பதைப் பற்றிச் சந்தோஷப்படுகிறோம். சுருக்கத்தில் இப்பந்தய ஓட்டங்களில் எம் மாணவர் வெகு திறமையாய் நடந்துகொண்டிருக்கின்றனர். 12 பேர்களில் 11 பேர் வெற்றிமாலை அணிந்து அதாவது (92%) வெகுமதிகளுடன் வெளிப்போந்தனர். இவ்விதம் வேறு எந்தப் பள்ளியும் வெற்றிபெறவில்லையென்பது குறிப்பிடத்தகும்.

மாணாக்கன் : ஸார், நீங்கள் கொடுத்த வீட்டுக்கணக்கைக் கஷ்டப்பட்டு பத்து தடவை கூட்டிப்போட்டேன்.

உபாத்தியாயர் : ஸரி, கெட்டிக்காரன். கஷ்டப்பட்டால் தான் விடை சரியாய்வரும். எங்கே, கொண்டுவா ?

மாணாக்கன் : பத்து விடைகள் வருகின்றன.

P. Vairaperumal,
Pupil.

பெற்ருேர் சங்கம்

பெற்ருேர் சங்க விழாக்கள் பின்வரும் பாடசாலைகளில் ஒவ்வொன்றிலும் வெகு சீர்சிறப்புடன் நடந்தேறியிருப்பதின் விவரங்கள் அந்தந்தக் காரியதரிசிகளின் மூலமாய் நமக்கு வந்துள்ளன. மிகவும் மகிழ்வுறுகின்ருேம். ஆயினும் ஒவ்வொன்றின் முழு விவரத்தையும் இங்கு பிரசுரிக்க இடமில்லாததைக் குறித்து வருந்துகின்ருேம். மன்னிப்பார்களாக.

16–11–'41-ல் திருச்சி தாலூகா காட்டூர் பாப்பாக்குரிச்சி லேபர் பாடசாலை. (காரியதரிசி, M. கந்தஸ்வாமி).

28–11–'41-ல் திருக்காம்புலியூர் லேபர் பாடசாலை. (காரியதரிசி, பழனிஸ்வாமி).

30–11–'41-ல் தூரிபுஷ்ட ஸ்தாபகரும் தலைவருமான திரு. ஏ. ஜே. ஏ. மார்ட்டின் அவர்களது 30-வது ஜயந்தி. (காரியதரிசி, எஸ். எஸ். வேலாயுதம்).

30–11–41'-ல் குளித்தலை தாலூகா, மேட்டுத் திருக்காம்புலியூர் லேபர் பாடசாலை. (காரியதரிசி, N. M. இராமஸ்வாமி).

1–12–41-ல் அம்பாசமுத்திரம் தாலூகா, குத்தப்பாஞ்சான் R. C. பாடசாலை. (காரியதரிசி, S. ஞானபாக்கியம்).

7–12–'41-ல் பெரம்பலூர் தாலூகா, பென்னக்கோணம், லேபர் பாடசாலை. (காரியதரிசி, S. Savarianantham).

8–12–'41-ல் முசிரி தாலூகா, பச்சபெருமாள்பட்டி, லேபர் பாடசாலை. (காரியதரிசி, M. சவரிமுத்து).

12–12–41-ல் வெய்க்காலிபட்டி அர்ச். சூசையப்பர் உயர்தர ஆரம்பப் பாடசாலை.

13–12–'41-ல் நாகை தாலூகா, திருப்பூண்டி ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுவிழா. (காரியதரிசி, T. Palanithurai).

18–12–'41-ல் R. C. பாடசாலை, கருங்குளம். (காரியதரிசிகள், T. Savarimuthu and S. Gnanapragasam).

22–12–'41-ல் தேரிருவேலி முஸ்லீம் பாடசாலை "சுகாதாரவாரக் கொண்டாட்டம்" நடைபெற்றது. (M. Sundaranandam, H. M.) தலைவர், ஸ்ரீ அனந்தகிருஷ்ணய்யர், ஹெல்த் இன்ஸ்பெக்டர்.

உல்லாசப்பிரயாணம்.—உரத்தூர் முதல்தர எலிமெண்டரி பாடசாலையின் உல்லாசப்பிரயாணம், 24–11–'41 முதல் 26–11–'41 முடிய. (T. P. Chellaswami, Manager, Aided El. School, Orathur, Tanjore Dt.)

அர்ச். ஆரோக்கியமாதாவின்
இளஞ்சாரணச் சிறுவரியக்கம் திறப்புவிழா

(N. Mudiappan, Cub-master,
St. Mary's Boys' School, Cantt. Trichy.)

கடந்த 5–12–'41-ல் திருச்சி, அர்ச். ஆரோக்கியமாதாக் கோவில் ஆண்பாடசாலையில் புதிதாய் இளஞ்சாரணர் இயக்கம் ஷை பாடசாலைப் பிரதம ஆசிரியர் உயர் திரு. A. அருள்சாமி அவர்கள் சீரிய தலைமையின்கீழ் சிறப்பாய்த் திறக்கப்பட்டது.

அவ்வமயம் ஷை பாடசாலை எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும், மற்றும் வேறு ஆசிரியர்களும், பொதுஜனங்களும் நிறைந்திருந்தார்கள். கடவுள் வணக்கத்திற்குப்பிறகு, தலைவரவர்கள் முகவுரையில், தான் மாணவராயிருக்கையில் சாரண இயக்கத்தில் சேர்ந்து லீடர் பேட்ஜ் (Leader badge) வாங்கியிருப்பதாயும், இவ்வியக்கம் இப்பாடசாலையில் ஏற்படுத்த வெகு முயற்சிகள் எடுக்கப்பட்டு தற்சமயம் வெற்றிபெற்றதற்காக, அமலனுக்கு ஸ்துதிசெய்யவேண்டும் என்றும் கூறினர்.

பின்னர், திரு. A. மரியசூசையவர்களால் "சாரணரின் இயக்கமும் ஒழுக்கமும்" என்பதுபற்றி ஓர் அரிய பேருரை நிகழ்த்தப்பட்டது.

இடையில் சாரணச் சிறுவர்களின் ஆட்டபாட்டங்களும், இனிய பாடல்களும் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தின. இறுதியாகத் தலைவரவர்களின் முடிப்புரையுடன் எல்லோருக்கும் நன்றிகூறப்பட்டு ஷை இயக்கம் நீடூழி நீடூழியாய்ச் செழித்தோங்க அமலநாயகியை இறைஞ்சி மன்றாடி, அரச மங்களத்துடன் வைபவம் இனிது கலைந்தது.

யோசனைக் கணக்கு

1. ஒரு பையில் சில கால் ரூபாய் நாணயங்களும், கால் ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்கு அரை ரூபாய் நாணயங்களும். கால் ரூபாய் நாணயங்களில் பாதி அரைக்கால் ரூபாய் நாணயங்களும், அரை ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையில் நாலில் ஒரு பங்கு முழு ரூபாய் நாணயங்களும் இருக்கின்றன. பையில் இருந்த மொத்த நாணயங்களின் மதிப்பு ரூ. 72–8–0 என்றால் ஒவ்வொரு வகையிலும் உள்ள நாணயங்கள் எத்தனை?

K. Srinivasan.

சிறுவர் பகுதி

(பாண்டர்) நாயும் சுண்டெலியும்.

தொந்தரவின்றி இளைப்பாற, பாண்டர் ஒரு மரக்கொட்டகையைத் தெரிந்துக் கொண்டது. தோட்டக்காரன் ஜோவும், பாண்டருடன் தனது சகோதரனைப்போல் பேசிக்கொண்டே தன் அலுவலைச் செய்வான். பாண்டர் நாயும் தோட்டக்காரனைக் கவனித்துக்கொண்டே இருக்கும். ஆனால் கண்டுபிடிப்பது ஒன்றும் கிடையாது.

ஒருநாள் ஜோ வெளியில் சென்றுவிட்டான். அதிக உஷ்ணமாக இருந்தபடியால், பாண்டர் கொட்டகைக்குள் சென்று ஒரு பெட்டியில் ஏறி அதன்உள்ளே படுத்துக்கொண்டது. அயர்ந்து தூங்கும்பொழுது தனக்கும் கீழ் ஏதோ ஒரு பெரிய சிங்கம் நடினமாடிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டு விழித்துப் பார்த்தது. ஒரு நூதன சிறு பிராணி ஒன்று அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்து கடைசியில் மறைந்துவிட்டது. தூக்கக் கலக்கத்தில் பாண்டரும் அந்த மிகச் சிறிய பிராணியைக் கவனித்துக் கொண்டே இருந்தது.

திடீரென்று தற்செயலாக கேதரின் (பூனை) உள்ளே நுழைய, பாண்டரானது தான் கண்டதை அதிக வியப்புடன் சொன்னது, ஒரு பெரிய சிங்கம் ஒன்று மிகச் சிறிய ஒரு நூதனப பிராணியாக மாறி மறுபடியும் கேதரினுகவே மாறிவிட்டது என்று பாண்டர் பூனையிடம் (கேதரின்) சொல்லிற்று.

பாண்டரின் மதியீனத்தை அறிந்து "கனவிலே கண்ட அந்தச் சிறிய நூதனப் பிராணியைச் சும்மா விட்டுவிட்டாயோ? அதுதான் சுண்டெலி" என்றது. சுண்டெலி என்பதைக் கேட்ட பாண்டர், மிக வியப்படைந்து அதை நன்ருகக் கூர்ந்து கவனிக்க விரும்பி அதே சோகமாக இருந்தது. ஏனெனில் அதுவரையிலும் சுண்டெலியைக் கண்டதேயில்லை.

விடுகதை விடைகள்

கொத்து 32, மலர் 6, பக்கம் 161 :—விடை 1. கப்பல்.

கொத்து 32, மலர் 6, பக்கம் 169-ல் யோசனைக் கணக்கு விடை. படகு தண்ணீரில் சென்றதூரம் $3\frac{1}{2}$ மைல்.

யோசனைக் கணக்கு விடையளித்தவர்கள் :-S. Arokiasame, Kannagudi ; D. Charmaraj Victor ; K. Gopalan ; G. T. S., Ramnad.

கொத்து 32, மலர் 6, பக்கம் 184 யோசனுவிருத்திச் செய்யுள் நடுவெழுத்தலங்காரம் **விடை. திருவள்ளுவர்.**

செய்யுள்

"கேட்டதொரு நடுவெழுத் தலங்கலொன்று
கேட்டிடுவாய் செப்புகின்றேன் அருள்ராஜே நீர்
வாட்டமுடன் "வண்ணாத் திப் புழு" தாவரம் ரசம் உறிஞ்சும்.
மலையினின்று நீர் ஓடும் சிறு "அருவி" யாகும்
ஊட்டிடா வளர் பறவை "சேவல்" தானே
ஊன் வடிக்கும் பூச்சியது "தெள்ளு" ஆகும்
தேட்டமுடன் பாஷைகளில் "துளுவம்" ஒன்றும்
திரனற்ற "உவர்" மண் என்ற செய்தி கேளும்
நாட்டமுடன் நாடு வென்றார் "கோர் முகம்மது" ஆகுமென்று
நவின்றிட்டேன் ஆரோக்கியஸாமி நானே
பூட்டியதோர் "குறளதனை" உலகுக் கீந்த
புண்ணியனர் "திருவள்ளுவர்" புகழ்போமே.

T. S. S. ஆரோக்கியஸாமி,
H. M., லேபர் ஸ்கூல்,
தோளூர்ப்பட்டி P. O., முசிரி தாலுகா.

கோலாட்டம்

A. Gnanadickam, *Music Teacher.*

பிஹாக். (மகிமைநிறைந்த) ஏகம்

பல்லவி

[1] மாலைக் கதிரோன் மறையும் வேளை மானிலத்தில்
[2] வாமபள்ளிப் பாலர்களே! [1]க்ஷேமம் சுகந்தேடிடவே
[2] நாமும் கூடி ஆடிடுவோம்.

சரணம்

[1] சாலை மர மீது பறவை
[2] ஜாலங்களும் சேர்த்து இரவை
[1] காலை வரையும் கழிக்கத் தருவை
[2] கருத்தாய் நாடுஞ் சமயந்திருவை... வாம.

[2]

[1] கரக்கோல் கீழும் மேலும் காட்டி
[2] கால்கள் இசைவாய்ப்பின் நாட்டி
[1] சிரங்கள் வலமும் இடமும் ஆட்டி
[2] சேர்ந்துல்லாசமாய் நாம் பாடி... வாம.

[3]

[1] கொட்டு கோல்கள் சேர்ந்து ஒன்றாய்
[2] குதிகால் தரையில் ஊன்று நன்றாய்
[1] விட்டம் போல் மேல் காட்டு நின்று
[2] விதம் விதமாய் ஆடி இன்று... வாம.

பல்லவி: கா,க கமமா ரிகரீ ஸா,ரி
மா,லைக் கதிரோன் மறையும் வேளை
கா,ரி ஸஸா, × தா ; ஸா ; ரீ ; கா ;
மா,னிலத்தில் வா ; ம ; பள் ; ளி ;
ரி க ரீ ஸ ஸா, தா ; ஸா ; ரீ ; கா ;
பா.லர் களே, க்ஷே ; ம ; சு ; கந் ;
ரி க ரீ ஸஸா, நீ ; ரீ ; கா ; பா ;
தே.டி டவே ; நா ; மும் ; கூ ; டி ;
கா , ரி ஸஸா,
ஆ , டி டுவோம்.

சரணம் :	கா,க	கரிகா	பா,*ம	பபபா
	சா,லே	ம.ர	மீ,து	பறவை
	பா,ப	தா,த	நீ,த	பபபா
	ஜா,லங்	க,ளும்	சேர்ந்து	இரவை
	ஸ்ா.ஸ்	ஸ்ஸ்நீ	தநிதா	பபபா
	கா,லே	வரையும்	கழிக்கத்	தருவை
	பதபா	கா,ரி	கமகா	கரிஸா
	கருத்தாய்	நா,டும்	சமயங்	திருவை ×

குறிப்பு :—பாலிகைகளுக்கு நன்றாய் இராக தாளத்துடன் பாடல் கற்பிக்கப்பட்டபின் கோல் அடிக்கப் பழக்குதல் வேண்டும். உபாத்தியாயர் ஷ பாடலுக்குத் தகுந்தவிதமாய் தம் இஷ்டம்போல் பாலர்களுக்கு ஆட்டம் கற்பிக்கலாம். பிள்ளைகளை இரு கட்சியாகப் பிரித்து கூட்டத்திற்குத் தகுந்தாப்போல முதல் கட்சியில் 4 பிள்ளைகளைக் குறித்துக்கொள்ளவேண்டும். இவர்கள்தான் முதலில் பாட்டை ஆரம்பிக்கவேண்டும்.

[1] முதல் கட்சி பாலர்கள் பாடவேண்டிய அடி.

[2] இரண்டாவது கட்சியார் யாவரும் சேர்ந்து பாடவேண்டியது.

இப்படியே மற்ற அடிகளையும் பாடவேண்டும். சரணம் பாடிய பின் 2-வது கட்சியார் "வாமப்பள்ளி" என்ற எடுப்பை எடுத்துப் பாட முதல் கட்சியார் "க்ஷேமசுகமும்" அதன்பின் யாவரும் சேர்ந்து "நாமும் கூடி" என்றதைப் பா்டி "மாலைக்கதிரோன்" பாடி நிறுத்தல் வேண்டும்.

விகடக்கொத்து

1. ரயிலுக்கு அவசரமாக ஓடிவந்த பிரயாணி : பெங்களூர் மெயில் இப்பொழுது எங்கிருக்கும்?

வம்பன் : "தண்டவாளத்தின்மேல்."

2. **தகப்பனுர் :** ஏண்டா, தொட்டிலை இவ்வளவு உயரத்தில் கட்டியிருக்கிறுய்?

பையன் : குழந்தை கீழே விழுந்தால் நன்றாய் சப்தம் கேட்கும். உடனே போய் தூக்கிவிடலாமென்று.

A. A. Muthu.

விளம்பரம்

தற்கால பாடத்திட்டத்திற்கு ஏற்றாப்போல், உயர்தர, ஆரம்பப் பாடசாலைகளுக்கு வேண்டிய உபகரணங்களை ஆர்டர் கொடுத்த ஒரு வாரத்தில் சுத்தமாயும், நேர்த்தியாயும், குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

இவ்வாறு உபகரணங்கள் செய்து கொடுத்து வெகுமதிகள், நற்சாட்சிப் பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள் பெற்றிருக்கிறேன்.

1. விநோதப்பிரியன் அல்லது Wonderful Body இப்படம் செய்ய ஒரு மாதமாகும். அளவிற்குத் தக்காப்போல் விலை.
2. நூல்நூற்கும் நூதனன் அல்லது ராட்டுப் பெட்டி ... ரூ. 3 0 0
3. பலவிதமான பம்புகள் (தண்ணீர் உறிஞ்சுவது—5 பம்புகள் 1 செட்) ... ரூ. 1 4 0
4. பூகோள உபகரணங்கள் (2-வது, 3-வது வகுப்புகளுக்கு 1 செட்) ... ரூ. 3 0 0
5. இந்தியா கிளாஸ் ... ரூ. 0 12 0
6. உலக கிளாஸ் ... ரூ. 2 0 0
7. பேரிஸ்கோப் (Periscope) ... ரூ. 0 8 0
8. சங்கரநயினூர் கோவில் தாலுகாப் படம் ரூ. 0 12 0
9. கதைப்படங்கள் : தங்களுக்குப் பிரியப்பட்ட கதையை சிறு தாளில் எழுதி அனுப்பினுல் அதற்குத் தக்காப் போல் போட்டுக்கொடுக்கப்படும்.

விலாசம் :—

S. மரியதாஸ்,
ஆர். ஸி. ஸ்கூல், நாராயணபுரம்,
வாசுதேவநல்லூர் போஸ்டு,
ராஜபாளையம் மார்க்கம், (திருநெல்வேலி ஜில்லா).

182304
சென்னை-600 008

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

OUR EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers	Trained Teachers in need of Employment

---

கீழ்க்கண்ட மானேஜர்களுக்குப் போதனைமுறை பயின்ற உபாத்திமார்கள் தேவை. வேலையில்லாத உபாத்திமார் அன்னவர்களுக்கு நேராகவே மனுக்கள் சமர்ப்பித்துக்கொள்ளக்கடவர்.

1. தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலுக்கா, வேளாங்கண்ணி ஆர். ஸி. பாடசாலை மானேஜருக்கு ஒரு ஹையர்கிரேடு ஆசிரியர் ஜனவரி 31-ம் தேதியிலிருந்து தேவை. மாதச்சம்பளம் ரூ. 14; பிற்பாடு ஆசிரியரின் சாமர்த்தியத்துக்குத் தகுந்தாப்போல் உயரும்.

2. சேலம் ஜில்லா, திருச்செங்கோடு மார்க்கம், கண்டம்பாளையம் போஸ்ட், கோலாரம் பஞ்சாயத்து பிரசிடென்டுக்கு ஒரு ஹையர்கிரேடு ஆசிரியர் உடனே தேவை. மாதச் சம்பளம் ரூ. 15.

Reg. No. M. 1534.

சுற்றறிக்கை

Circular No. 27/41 dated 23-12-'41.

போதனு விஷய பூங்கோத்து எனும் மாத மொருமுறை மலரும் பத்திரிகையின் 1941 டிசம்பர் இதழில் நமது ரேஞ்சைப்பற்றி 180-ம் பக்கம், மேலட்டை ஆகியவைகளில் செய்தி வந்திருப்பது எல்லாருடைய கவனத்துக்குங் கொண்டுவரப்படுகிறது. பக்கம் 175-ல் வெளியாயுள்ள "கிராம ஆசிரியரும், ஓர் படிப்பில்லா ஸ்திரீயும்" எனும் சம்பாஷணையும் 167-ம் பக்கத்தில் வந்துள்ள "கிராமக் கல்விப் பிரசாரம்" எனும் சம்பாஷணையும் சிறுவர் சிறுமிகளால் பெற்ருேர் சங்கக் கூட்டங்களில் நடத்தற்குரியது என்று இவ்வறிக்கை மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஊக்கமுள்ளவர்கள் கவனித்துப் பயன் அடையலாம்.

(ஒப்பம்)
Deputy Inspector of Schools,
Musiri Range.

To the Secretaries,
Teachers' Association.

Copy to the Editor, "போதனுவிஷயப் பூங்கொத்து"
(மெய்ப்பிரதி)

பத்திராதிபர்,
போதனு விஷயப் பூங்கொத்து.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.